76

உ

காமாட்சி அம்மை துணே.

காஞ்சிகுடிக்காடு
தலச்சுருக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1959
MADRAS

காமாட்சி அம்மை
தோத்திரப்பதிகம்
பிள்ளைத்தமிழ்

இவற்றின்

மூலம், அரும்பதவுரை, கருத்துரை,

பிள்ளைத்தமிழ் சிறப்புரை

ஆக்கியோன்

காஞ்சி இரா. குப்புஸ்வாமி, B. A.,

ராஜேஸ்வரி அச்சகம்,

மன்னார்குடி.

Q25:38.2119.K
N58
112792

உ

காமாட்சி அம்மை துணை

காமாட்சி அம்மை திருக்கோயில் கொண்டுள்ள காஞ்சி குடிக்காடு

தலச் சுருக்கம்.

காமாட்சி அம்மை

தோத்திரப் பதிகம், பிள்ளைத் தமிழ்

இவற்றின்

மூலம், அரும்பத உரை, கருத்துரை,

பிள்ளைத் தமிழ் சிறப்புரை.

இவை

திருவாளர், காஞ்சி, இரா. குப்புஸ்வாமி என வழங்கும்

சிவக்கொழுந்து, B. A., அவர்களால்

ஆக்கப்பெற்று

சென்னை தணிகைமணி,

ராவ்பகதூர், வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A., அவர்களின்

பாராட்டுரையுடன்

காஞ்சி குடிக்காடு, பெரு நிலக்கிழார், செல்வத் திருவாளர்

K. திருவேங்கட முதலியார், B. A.,

அவர்களின்

பொருள் உதவியைக் கொண்டு

அவர்கள் விரும்பிய வண்ணம்

அவர்களின் மாமன்,

மன்னை மூதறிஞர் திருவாளர்,

K. G. கறுப்பையா முதலியார் என வழங்கும்

சீநிவாச முதலியார் அவர்களால்

மன்னை, ராஜேஸ்வரி அச்சகத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

மன்னை, 7—7—1958.

பதிப்புரிமை] [விலை 35 காசு

முதற் பதிப்பு — 750 பிரதிகள்.
பிரதி 6 அணா

112792

இப்பதிப்பில் அடங்கிய படங்கள்

1 காஞ்சி குடிக்காடு காமாட்சி அம்மையின் திருஉருவம்.

2 காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிக ளவர்கள் திருஉருவம்.

3 காஞ்சி குடிக்காடு காமாட்சி அம்மை திருக்கோயில் தோற்றம்.

4 காஞ்சி குடிக்காடு காமாட்சி அம்மை சந்நதியில் அன்னமளித்தல்.

1, 3, 4 புகைப்படங்கள் பிடித்தவர்
மன்னார்குடி திரு. D. கோவிந்தராஜன்.

பட அச்சுகள் தயாரித்தவர்கள்
சென்னை M. C. அப்பாசாமி செட்டியா ரவர்களும் அவர்களின் குழுவினரும்.

2-வது படத்தின் அச்சு சென்னை B. G. பால் புத்தக விற்பனை குழு தாபனத்தின் உரிமையாளர் திருவாளர் நீலகண்ட அய்யரவர்க ளுடையது.

அதனை உரிமையாளரின் அனுமதியுடன் பெற்று இப்பிரசுரத்துடன் வெளியிட உதவியவர்கள் திருவல்லிக்கேணி 'பக்தன்' பதிப்பாசிரியர் திருவாளர் M. O. அழகு சிங்கராசாரியா ரவர்கள் B. Sc., B. L.

மெய்யன்பர்கள் யாவர்க்கும் எனது உள்ளங்கலந்த நன்றி

0215 :38. 21193. K
N58

பிரசுர கர்த்தர்.

காஞ்சி குடிக்காடு
காமாட்சி அம்மை திருஉருவம்

காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்
ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிக ளவர்கள்
திருஉருவம்

முன்னுரை.

திருக் காஞ்சி குடிக்காட்டில் திருக்கோயில் கொண்டிருக்கும், ஸ்ரீ காமாட்சியம்மன், தொண்டை மண்டலத்தவர்களாகிய எங்களது முன்னோர்களது வழிபடு தெய்வமாக எழுந்தருளியிருக்கின்றது என்பது யாவரும் அறிந்த விஷயம்.

அம்மனுக்கு சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னரே ஆலயம் புதுப்பிக்க அன்போடு முயற்சித்த இவ்வூர் அப்போதைய பெரிய தனக்காரரான ஸ்ரீ வே. சோமசுந்தர தேசிக ரவர்களது முயற்சி காரணமாக, எங்கள் முன்னோர்களது உதவியும்கொண்டு கோயில் திருப்பணி செய்யப் பெற்றது. பின்னர் ஷை குடும்பத் தவரும் இவ்வூர் பெருநிலச் சுவான்தாரருமான எங்கள்வகை காலஞ்சென்ற ஸ்ரீ K. T. கிருஷ்ண முதலியா ரவர்கள், ஷை ஆலயத்தைத் திருப்பணி செய்யப் பேரவா கொண்டிருந்தும், அவர்கள் காலத்தில் பூர்த்தி யாகாமற் போயிற்று, எனினும் அவர்களது அருமைப் புதல்வ ராகிய, ஸ்ரீ K. திருவேங்கட முதலியா ரவர்கள், அவரது தந்தையாரின் அவாவைச் சிரமேற் கொண்டு இவ் வாலயத் திருப்பணியை அம்மன் திருவருளினால் சீரிய முறையில் செய்வித்து, ஸ்ரீலஸ்ரீ காஞ்சி காம கோடி பீடாதி பதிகள் ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அனுக் கிரகமும் பெற்று 31—1—1952ல் சிறப்பாக கும்பாபிஷேகம் செய்வித்தார்கள்.

இக்காமாட்சியம்மனுக்கு, தோத்திரப் பதிகமும், பிள்ளைத் தமிழும், வித்வான் ஸ்ரீ சிவக்கொழுந்து பிள்ளை என்கிற ஸ்ரீ C. R. குப்புசாமி பிள்ளை, B. A. அவர்களால், செந்தமிழ்த் தொகுப் பில், உயரிய நடையில் பாடப்பெற்று; சென்னை தணிகைமணி ராவ்பகதூர் ஸ்ரீ வ சு. செங்கல்வராய பிள்ளை M. A., அவர்களால் பாராட்டுரையும் ஸ்ரீ அம்மன் திருவருளால் இயற்றப்பட்டிருக்கிறது. மெய்யன்பர்கள், அவைகளை ஓதி, இகபர சம்பத்துகளை யடைய வேண்டி ஷை பாக்களைத் தக்க முறையில் பிரசுரிக்க, எனக்கு வாய்ப்பு கிடைத்ததுவும் ஷை அம்மனின் திருவருளெனத் தேர்ந்தேன்.

இதிலுள்ள தோத்திரப்பதிகம், பிள்ளைத்தமிழ், தலச்சுருக்கம் இவைகளை அன்போடு இயற்றித்தந்த மேற்கண்ட ஸ்ரீ C. R. குப்பு சாமி பிள்ளை, B. A., அவர்களுக்கும், இதற்குப் பாராட்டுரை மன முவந்து இயற்றிய மேற்கண்ட தணிகைமணி ராவ்பகதூர் ஸ்ரீ வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A., அவர்களுக்கும், இந்த ஸ்தலவாசிகள் சார்பாகவும், மேலேகண்ட ஸ்ரீ K. திருவேங்கட முதலியார் அவர்கள் சார்பாகவும், என்றும் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட் டுள்ளேன்.

"— மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ் கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு."

இப்புத்தகம் எழுதி வெளிவர ஆதிமுதலே ஊக்கத்துடன் முயற்சித்து வருபவரும் தனது முன்னோர்கள் தவப்பயனால் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீலஸ்ரீ ஆசார்ய சுவாமிகள், ஸ்ரீ மடம் முத்ராதிகாரியாய் அனுக்கிரகம் பெற்றவருமான இவ்வூர் (V.H.M.) ஸ்ரீ C. தியாகராஜ தேசிகர் அவர்களுக்கும், இதனை அச்சிட்டு உதவிய மன்னார்குடி ராஜேஸ்வரி அச்சகம் உரிமையாளர் ஸ்ரீ C. M. சுப்பிரமண்ய பிள்ளை அவர்களுக்கும், இதனை ஆதரிக்கும் மற்றுமுள்ள மெய்யன்பர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

இப்பதிப்பில் காணக்கூடிய பிழைகளை அன்பர்கள் பொறுத்து, இது ஒரு பக்தி நூல் என்கிற முறையில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வெளியீடானது காலஞ்சென்ற ஸ்ரீ K. T. கிருஷ்ண முதலியார் அவர்களின் ஞாபகார்த்தமாக, ஷையார் அருமைக் குமாரர் ஸ்ரீ K. திருவேங்கட முதலியார் அவர்களால், ஸ்ரீ காமாட்சி அம்மன் சந்நதியில் சமர்ப்பணம் செய்யப் பெறுகிறது.

முக்கியமாய் மேலேகண்டவிதம் முன்னோர்கள் நினைத்தபடி இத்தெய்வத் திருப்பணியை, தன் செலவில் செய்வித்து, ஒன்றுக்கும் அருகதை யில்லாத எனக்கு, அரிய ஆத்மார்த்தமான இந்நூலை பிரசுரம் செய்யும் வாய்ப்பை, வற்புறுத்தித்தந்த கனம் ஸ்ரீ K. திருவேங்கட முதலியார் அவர்களுக்கு நன்றி பாராட்டுவதோடு, அவர்களும், அவர்களது குடும்பமும், மேலேயுள்ள பாராக்களில் கண்டிருக்கிற மெய்யன்பர்களும், அவர்களது குடும்பங்களும், மற்றும் இவ்வாலயத் திருப்பணியில், ஆதிகாலம் தொட்டு ஈடுபட்டும், உடலுழைப்பினாலும் உதவி செய்துவரும் குடிமக்களும் அவர்களது குடும்பங்களும், நலமெலாமடைந்து நீடூழி வாழ்ந்துய்ய திருவருள்பாலிக்கும்படி, ஸ்ரீ அம்பாள் சந்நதியில் நிலந்தோய்ந்து பிரார்த்திக்கின்றனன்.

> "தம்மின்தம் மக்கள் தவத்தினர் பெற்றவர்தம்
> செம்மனங் கண்டு செயற்கு".
>
> "சான்றோர் எனப்படுவர் எஞ்ஞான்றும ஈன்றோர்
> உளமறிந் தாற்று பவர்".

தங்கள்,

மன்னார்குடி,
7-7-1958.

K. G. கறுப்பய்யா முதலியார்
என்கிற
சீநிவாச முதலியார்,
பிரசுரகர்த்தா.

உ

வேலு மயிலுந் துணை

தணிகைமணி ராவ்பகதூர்,

வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.,

அவர்களின்

பாராட்டுரை.

காஞ்சி குடிக்காடு காமாட்சி அம்மையின் பதிகத்தையும், பிள்ளைத் தமிழையும் பாடின இந்நூலாசிரியர் காஞ்சி இரா. குப்பு ஸ்வாமி பிள்ளை என வழங்கும் சிவக்கொழுந்து அவர்கள், B. A., எனது அம்மான் குமாரர். இளம் பருவத்தி லிருந்தே இயற்கை அறிவும் நுண்ணறிவும் வாய்க்கப் பெற்ற திருவினர். சிற்ப முதல் செய்யுள் இயற்றும் திறம் வரையில் பல கலைகளிலும் இறைவன் அருளால் இவ்வருக்குக் கூடிய இயற்கை ஞானம் அதிசயிக்கத் தக்கது.

இவர் பாடிய பதிகத்திலும், பிள்ளைத்தமிழிலும் ஆழ்ந்த, அருமையான புதிய கருத்துக்கள் அடங்கி யுள்ளன. அவை படிப் போர்க்கு மகிழ்ச்சியைத் தரத்தக்கன. இவருடைய ஆற்றலை அறிந்து அதைப் பயன்படுத்திய பெரியார் காஞ்சிகுடிக்காடு பெரியதனக்காரர் திருவாளர் தியாகராச தேசிக ரவர்களுடைய பண்பும் அறிவும் பாராட்டற் பாலன.

காஞ்சி குடிக்கா டெனுந்தலத்திற்
காத லுற்றே அமர்ந்துள்ள
தேஞ்சி றக்குந் திருமொழியும்
தெரிசிப் போர்க்குச் சிறப்பளிக்கும்
வாஞ்சை நலமும் கொண்டுள்ள
மங்கை எங்கள் காமாட்சி
யாஞ்செம் மொழியாள் புகழ்த்திறத்தை
அரிய பாவால் உரைத்துள்ளார்.

அவர்தாம் யாரோ எனிலுரைப்பேன்
அவரென் அம்மான் மகனுவார்
தவத்தாற் பெற்ற சகலகலைச்
சாரும் நுகரும் பண்பாளர்
இவர்பேர் குப்புஸ் வாமி என்பார்
இவர்தம் மிளமைப் பருவமுதல்
நவமார் பாடல் கடவுளுக்கே
நண்பாற் பாடி மகிழ்ந்துள்ளார்.

நுந்தா விளக்கின் சுடரனைய
நோன்மை விளக்கம் இவைவாய்ந்த
எந்தாய் தேவி காமாட்சி
இறைவி இவர்க்கு நல்லறிவும்
சிந்தா ஒழுக்கம் நோயின்மை
செல்வம் நீண்ட ஆயுளிவை
தந்தா தரித்துக் காத்தருள
தமியேன் அவளை வேண்டுவனே!.

292, லிங்கசெட்டித்த தெரு, சென்னை-1. 22—6—1958.

உ

காமாட்சிஅம்மை துணை

திருக் காஞ்சி குடிக்காடு

தலச்சுருக்கம்.

ஆக்கியோன்: காஞ்சி, இரா. குப்புஸ்வாமி, B. A.

திருக் காஞ்சி குடிக்காடு காமாட்சி அம்மை "தோத்திரப் பதிகம்", "பிள்ளைத் தமிழ்" எனும் பெயரால் ஆத்திக உலகத்துக்கு அளிக்கப்பட்டுள்ள இவ்விரு சிறு யாப்பின் பொருளை நன்கு யாவரும் உணரும்படி உதவும் நோக்கத்துடன் "தலச்சுருக்கம்" ஒன்று முதற்கண் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

நமது பாரத தேசத்தில் முகம்மதிய மன்னர்கள் ஆதிக்கம் பெற்றுவந்த காலத்தில் இந்துமதமும், இந்துமதக் கோயில்களும், அக்கோயில் விக்கிரகங்களும் அவமதிக்கப்பட்டு அழிக்கப்பட்டன என்பது சரித்திர உண்மை. இத்தகைய அவக்கேடு உச்சநிலை அடைந்த காலம் **ஐதர் கலாபனை** என்பர்

இக்கேட்டிற்கு அஞ்சி எடுக்கப்பட்ட தற்காப்பு நடவடிக்கைகள் பலப்பல. அதுபோது காஞ்சி காமகோடி பீடத்தில் எழுந்தருளியிருந்த காமாட்சிஅம்மை உற்சவ எடுப்பு விக்கிரகம் பக்தர்களால் தெற்கே கொணரப்படுகையில் அங்கங்குத் தங்கிச்சென்றதாகவும் அப்படித் தங்கிச்சென்ற இடங்களில் "குடிக்காடு" என்னும் இடம் ஒன்றென்றும் இவ்விடத்து ஆத்திக அன்பர்கள் அம்மை தங்கிச்சென்றதின் அடையாளமாக அக்காமாட்சி அம்மையின் திருஉருவம் ஒன்றை பிரதிட்டை செய்து இப்பதியைத் "திருக்காஞ்சி குடிக்காடு" என்று பெயர் தந்து அம்மையை வணங்குவாராயினர் என்றும் தாம் கர்ண பரம்பரையாக அறிந்த தகவல் என்பதாக மன்னை மூதறிஞர் திருவாளர் K. G. கறுப்பையா முதலியார் என வழங்கும் சீநிவாச முதலியார் அவர்கள் வாயிலாகத் தெரிய வருகிறது. ஆயினும் இவ்வரலாற்றுக்கு வேறு ஆதாரம் ஒன்றும் கிடைத்திலது.

இப்படி கொண்டு செல்லப்பட்ட சுவர்ண விக்கிரகம் தஞ்சையில் பிரதிட்டை செய்யப்பெற்று "பங்காரு காமாட்சி" என விளங்குவதாக ஒரு வரலாறும் உண்டு.

இக்காஞ்சி குடிக்காடு என்னும் சிறுபதி காவிரிக்குத்தெற்கில் மன்னைக்குத் தென்மேற்கில் சுமார் ஐந்து கல் தூரத்தில் உள்ளது. அம்மை பிரதிட்டை ஆனதிலிருந்து காலக்கிரமத்தில் அம்மையின் அருட்சக்தி பிரகாசிக்கலாயிற்று. தலம் நீர்வளம் நிலவளத்துடன் குடிவளமும் பெருகுவதாயிற்று என்று முதியோர் சொல்லத் தெரிகிறது.

மற்றெங்கும் வெற்றிகரமாக நடைபெறாத சர்க்கார் நெல் விதைப் பண்ணை காஞ்சிகுடிக்காட்டில் ஒப்பற்ற முறையில் இது போது நடந்து வருவது இப்பதியின் செழுமைக்குச் சான்றாகும்.

இப்பதியில் வீற்றிருக்கும் அம்மையைத் தங்கள் வழிபடு தெய்வமாகப் போற்றும் திருவாளர் திருவேங்கட முதலியார் அவர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள், காமாட்சி அம்மை சோழ நாட்டிற்கு வருமுன்னரே தொண்டைநாட்டு "வல்லபாக்கம்" என்ற சிற்றூரிலிருந்து தென்னாட்டிற்கு வந்தவர்களுள் ஒரு குடும்பத்தினர் என்பதாக இதன்முன் குறித்துள்ள மூதறிஞர் சொல்லக் கேட்டுள்ளேன்.

இற்றைக்குச் சற்றேறக் குறைய எழுபது ஆண்டுகளுக்கு முன் இப்போதைய பெரும்பண்ணையாராகிய திருவாளர் திருவேங்கட முதலியார் அவர்களின் முற்பாட்டனார்; திருவாளர் கிருட்டின முதலியார் அவர்கள் முதன் முதலாக அம்மைக்கு ஆலயத் திருப்பணி செய்துவைத்தார்கள் என்பதாகத் தெரிகிறது.

பிறகு இப்போதைக்குச் சுமார் ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்து வந்தவர்களும், இப்பதியின் தற்காலப் பெருநிலக்கிழாரும், அம்மையின் அருளுக்குப் பாத்திரமானவர்களுமாகிய மேற்கண்ட திருவாளர் திருவேங்கட முதலியார் அவர்களின் பாட்டனார் பொருளுதவியைக் கொண்டும், அவர்கள் காலத்து அவ்வூர் பெரியதனக்காரரும், அம்மைக்கு வழி வழித் தொண்டருமான அருட்செல்வர் சோமசுந்தர தேசிகர் அவர்கள் ஊக்கத்தினாலும், ஊர் பெருங்குடி மக்களின் ஒற்றுமையாலும், அம்மைக்கு ஆலயத் திருப்பணி மறுமுறையாகச் செய்துவைத்தனர் என்ப.

இங்ஙனமாக எடுப்பித்த கோயில் கும்பாபிடேகத்தை ஒட்டி அம்மை வீதி உலாக்காட்சி தந்தருளிய இரவு முழுதும் மாசிமிழ்

மண்ணெய் திரிவழியாக ஒளிவிட்ட போதிலும், விளக்கு நெய் சற்றும் உலவாத அற்புத நிகழ்ச்சி அம்மை நடத்தி இருக்கிறார் என்பது இப் பதியின் அன்பர்கள் கண்டதொரு அதிசயம். சக்தியே உருவா யமர்ந்துள்ள அம்மையின் அருட்சக்திக்கு எல்லையுமுண்டோ!

கோயில் முதல் தோற்றத்திற்குக் காரணராக இருந்தவர் களின் பேரப்பிள்ளையாகிய திருவாளர் கிருட்டின முதலியார் அவர் கள் கோயிலைத் தக்க முறையில் திருப்பணி செய்ய விருப்பங் கொண் டிருந்தார்கள் என்றும் அவ் விருப்பத்தை இப்போது, பெரும் பண்ணையாராக உள்ள திருவாளர் திருவேங்கட முதலியார் அவர் கள் பூர்த்தி செய்து வைத்தார்கள் என்றும் கோயிலின் முன் மண்ட பத்தில் அமைத்துள்ள சிலா சாசனத் திலிருந்து தெரிய வருகிறது.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீமத் சங்கரா சாரிய சுவாமிக ளவர்கள் காஞ்சி குடிக்காடு காமாட்சி அம்மை பிரதிட்டைக்கு "யந்த்ர ஸ்தாபனம்" அருட் செய்துள்ளார்கள் என் ப து இவ்வாலயத் திருப்பணிக்கும், அதில் திருக் கோயில் கொண்டுள்ள அம்மையின் சக்தி ப்ரபாவத்துக்கும் ஒப்பற்ற மகிமை தரத்தக்கது. அத்துடன் கோயில் கும்பாபிடேகமும் அப்பெருந் தகையார்களின் அனுக்கிரகத்தாலும் ஆசியாலும் நிகழ்ந்த தென்பது இத் தேவாலயத்தின் சிறப்பை நாளும் நாளும் உயர்த்துவ தாகும். இங்ஙனமாக கோயில் திருப்பணி செய்யப் பெற்று கும்பாபிடேகம் 31—1—1952ல் நிகழ்ந்தது என்பர் இவ்வூர் பெரியதனக்காரர் திருவாளர் தியாகராச தேசிக ரவர்கள்.

இப்போது கோயில் உயர்ந்த கோபுரத்துடனும், தடமாய மதில்களுடனும், அழகிய பிரகாரத்துடனும், விளங்குகின்றது.

கோயில் பூசை நைவேத்தியத்துக்கான திட்டங்கள் ஏற்படுத்தி இருப்பதோடு தானத்திற் சிறந்த அன்ன தானமும் தினமும் நடத்த திருவாளர் திருவேங்கட முதலியார் அவர்களால் ஏற்பாடு செய்யப் பெற்று அங்ஙனமே நடந்து வருகிறது.

கோயிலின் முன் மண்டபத்தில் விநாயகர் கற்சிலை உருவமும் முருகர், காசி விசுவநாதர், அன்னபூரணி, கிருட்டினன் முதலியோர் திரு உருவப்படங்களும் உள.

இப்பதியைச் சுற்றியுள்ளனவாகிய

1. விழல்காரத் தெரு (மன்னை நகரம்)
2. நெடுவாக்கோட்டை
3. செருமங்கலம்
4. காஞ்சி குடிக்காடு.

5. மேலவாசல்
6. எம்பேத்தி
7. காரிகோட்டை
8. மூவாநல்லூர்.

இவ்வெட்டு நாடுகளுக்கும் இக் காமாட்சி அம்மை கோயில் வழிபாடு தலமாக அமைந்திருக்கின்றது.

இக்காமாட்சி அம்மையை அடியேன் தெரிசிக்கும் பாக்கியம் இதன் முன் குறிப்பிட்டுள்ள அருட் செல்வர் சோமசுந்தர தேசிகரின் மருமகனும், இப்போது இவ்வூர் பெரியதனக் காரராக சேவை புரிபவருமாகிய அருட் செல்வர் தியாகராச தேசிக ரவர்கள் வாயிலாக கிடைக்கப் பெற்றேன் அம்மைக்குத் தோத்திரப் பாக்கள் ஆக்கித்தர ஒன்றுக்கும் பற்ற அடியேனை அவர்கள் ஊக்கியதின் பயனாக இத்தோத்திரப் பதிகமும், பிள்ளைத் தமிழும் அம்மையின் திருவருளால் உண்டாயின. ஆத்திக வளர்ச்சிக்கும் கோயில் சீரமைப்புக்கும் உள்ளன்புடன் உழைக்கும் அவர்கள் இத் தலச் சுருக்கம், பதிகம், பிள்ளைத் தமிழ், இவைகளை அம்மையின் ஆலயப் படத்துடனும், திரு வுருவப் படத்துடனும் அச்சிட செல்வத் திருவாளர் K. திருவேங்கட முதலியார் அவர்களின் முழு ஆதரவையும் பெற எடுத்துள்ள முயற்சிகள் மகத்தானது.

தெய்வ பக்தியை மக்களிடையே வளரச் செய்ய தோத்திரப் பாடல்களும், நீதி நூல்களும் பொதுவாக அன்பர்களுக்கும் சிறப்பாக சிறுவர்களுக்கும் தக்க அறிஞர்கள் வாயிலாகக் கற்பித்து தினம் இச் சந்நதியில் ஓதப்படுவது பெரும் பயனை அளிக்கும் என்பது அடியேனின் நம்பிக்கை. இதற்கு ஆவன இப்பால் செய்யப்பெற அம்மை திருவருள் சுரந்துள்ளது பற்றி அன்பர்கள் பெரு மகிழ்ச்சி எய்த வேண்டுவ தாகும்.

கோயிலுக்குக் கபிலை தீர்த்தம் ஒன்று அமைவது மிக்க அவசியம். இப் பதியில் திருக் கோயில் கொண்டுள்ள காமாட்சி அம்மை திருவருளே இத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

காமாட்சி அம்மை மூர்த்தி தலம், தீர்த்தம் இவைகளில் அளப்பரும் பக்தியின ராகிய முதலியார் குடும்பத்தினரும், தேசிக பரம்பரை யினரும். காஞ்சி குடிக்காட்டு மெய்யன்பர்களாகிய குடி மக்களும், நீடு வாழ்க, அம்மை திருவருள் சுரக்க வேண்டுவதுடன், அம்மை திரு வடிகளை மெய் யன்போடு வணங்கி இம்மையில் எல்லா நலன்களையும் எய்தி பேரின்பம் துய்க்கவும் இரஞ்சுவோ மாக.!

காஞ்சி குடிக்காடு தலச் சுருக்கம் முற்றுப் பெற்றது.



காஞ்சி குடிக்காடு காமாட்சி அம்மை திருக்கோயில் தோற்றம்



காஞ்சிகுடிக்காடு காமாட்சி அம்மை சந்நதியில்
அன்னமளித்தல்

உ

காமாட்சி அம்மை துணை.

திருக் காஞ்சி குடிக்காடு,

காமாட்சி அம்மை

தோத்திரப் பதிகம்.

காருலவுந் தென்சோழ வளநாட்டிற் காஞ்சிகுடிக்
காட்டிற் ருேய்ந்து
நீருலவு மிளமரக்கா நிறைசெல்வ மலர்தூவு
நேம கத்தாற்
சீருலவு முயர்செந்நெல் வானுலவுந் திரள்பசுவின்
தீம்பா லோடி
பாருலவுங் காமாட்சி பொழிகருணை கடைநோக்கைப்
பரவு வோமே. 1

1. **அரும்பத உரை.**

கார் = மேகம், தென் சோழ வளநாடு = காவிரிக்குத் தெற்காக உள்ள செழுமையாகிய நாடு, தோய்ந்து = மழையாக இறங்கி, இள மரக்கா = பருவ மரங்கள் சூழப்பெற்ற வனம், கடுக்காய் வனம் என்றுச் சிறப்பாகவும் கொள்ளலாம், நேமகத்தால் = நியமத்தால், சீர் = செல்வம், "தீம்பாலோடி பாருலவும்" என்றும் "காமாட்சி பொழிகருணை பாருலவும்" என்றும் கொள்க.

கருத்து.

மேகம் பொழிந்து நீர்ப் பெருக்கு எடுப்பதால் குடிக்காட்டில் மரங்கள் காலத்தால் புட்பங்களை உதிர்த்து அம்மைக்கு அருச்சிக்க நன்மைகள் யாவும் உண்டாகும். அதன் பயனுக நெல் உற்பத்தி பெருகி ஆவினம் மிகுதியாகப் பால் சொரியும், இதற் கெல்லாம் காரணமாக உள்ள காமாட்சி அம்மையைத் தொழுவோமாக!

நீடுகடுக் காய்வனத்துத் திருக்கோயில் கண்டமர்ந்து
நிழற்று மன்னே
நீடுலகந் தனைப்புரக்குங் கருணையுரு வெடுக்குமெங்கள்
நிமலை யின்பால்
பாடுமடி யார்பரவி சொன்மலர்தூ வித்தொழுது
பணிகொள் காலை
நாடுவரந் தந்தருள்கா மாட்சியுமை கழலிணையை
நச்சு வோமே. 2

மாசிகரி உயர்கோயில் மணிஎயில்கட் புடைசூழ
வைகுந் தெய்வம்
காசினியோ ரிசைபாட வைகறையிற் றுயிலுணர்த்தக்
கருத்திற் கொண்டு
தேசிகனுர் திருப்பள்ளி எழுச்சிநிதம் இயம்புகின்ற
சிறந்த தொண்டிற்
காசிகரமொடு எழுமென் அம்மைகா மாட்சிபதம்
அகத்துள் வைப்பாம். 3

---

2. நீடு = நீண்ட, நிழற்று மன்னே = அடியார்க்கு ஆதரவு அளிக்குந் தாய், புரக்கும் = காப்பாற்றும், நிமலே = பரிசுத்தை, பணி = அடிமை, கழல் இணை = கழல்களை அணியும் திருப்பாதங்கள், நச்சுவோம் = விரும்புவோம்.

கருத்து.

உயர்ந்தும் பரவியும் உள்ள கடுக்காய் மரங்கள் அடர்ந்த காடு இருப்பிடமாகத் திருக் கோயில் கொண்டு அங்கு வீற்றிருந்தும், வருந்துமவர்க்கு அபய மளித்தும், நீண்ட நில உலகத்தைக் காக்கும் கருணையே உருவெடுத்து வந்துள்ள பரிசுத்தையுமாகிய அம்மையிடம், அவ்வம்மையின் புகழைப்பாடி அடியார்கள் தம் சொற்களாகிய புட்பங்களைத் தூவித் தொழுது அம்மையின் குறிப்பு நோக்கி நிற்கும்போது அவ்வடியார்கள் வேண்டி வந்த வரங்களைக் கொடுக்கும் அவ்வம்மையாகிய காமாட்சியின் கழல் அணிந்த இரண்டு திருவடிகளையும் நச்சுவோமாக!

3. மாசிகரி = உயர்ந்த கோபுரம், மணிஎயில் = அழகிய மதில், காசினியோர் = உலகோர், இசைபாட = (துயிலுணர்த்த) இசைத் தமிழால் புகழை இராகத்தோடு பாட, ஆசிகரம் = ஆசீர்வதிக்கும் திருக்கரம்.

கருத்து.

உயர்ந்த கோபுரமும், அழகிய மதிலும் உடைய கோயிலில் பள்ளி கொண்டிருக்கும் அம்மையைத் துயிலுணர்த்தும் திருத் தொண்டு செய்யும் இவ்வுலகத்தவருக்கும், தேசு பொருந்திய சூரியனுக்கும், ஆசி கூறும் அபயகரத்துடன் பள்ளி நீங்கும் அம்மையின் பாதங்களை நெஞ்சில் வைப்போமாக!

மாங்கனியோ டோங்குபலா நனிபழுத்துக் கனியுதிர
 வாழை யீனும்
தீங்கனியுஞ் சேர்ந்துலவு மருவிவள மினிதுயருஞ்
 செழுமை மல்கி
ஓங்குதல மாங்காஞ்சி குடிக்காடு மன்னிவளர்
 உயர்ந்தோர் தம்மைத்
தாங்குதிரு காமாட்சி பதயுகங்க ளென்றென்றுந்
 தலைமேற் கொள்வாம். 4

நின்றபுகழ்க் காஞ்சிதனில் மாவடியில் நின்மலனை
 நினைந்து போற்றி
அன்றெருக்கால் எண்ணான்கு நல்லறங்கள் புரிந்திடத்தி
 லரனோ டுற்றுச்
சென்றுதிருக் காஞ்சிகுடிக் காடுதனில் உணவளிக்குஞ்
 சிரமாந் தானம்
நன்றுசெயுங் காமாட்சி எனுமிறைவி பாதமலர்
 நாடி வாழ்வாம். 5

---

4. ஈனும் = தருகின்ற, உயர்ந்தோர் = சிறந்தோர், பதயுகம் = கழலிணை.

கருத்து.

மா, பலா, கதலியாகிய முக்கனிகளும் கனிந்து உதிரும் செழுமை மிகுந்த குடிக்காட்டில், பக்த கோடிகளுக்கு அருள் புரியும் காமாட்சி அம்மையின் பாதார விந்தங்களைத் தலையிற் சூடுவோமாக!

5. நின்ற = நிலைத்து நிற்கின்ற, நின்மலன் = பரிசுத்தன், சிவன், எண்ணான்கு = முப்பத்திரண்டு, இடத்தில் அரனோடு உற்று = அரனின் இடப்பாகம் பெற்று, சிரமாந் தானம் = சிறந்த தானம், நன்று = நன்றாக.

கருத்து.

ஈஸ்வரனின் இடப்பாகம் பெற காஞ்சிமா நகரத்தில் தவம் செய்து 32 அறங்கள் புரிந்து அங்கிருந்து குடிக்காடு வந்து சிறந்த அன்னதானம் செய்யும் காமாட்சி அம்மையின் பாதங்களைத் துணை கொண்டு நல்வாழ்வு வாழ்வோமாக!

112792
ஒ45:38-அ1193
N58

காதளவு நெடும்புருவம் குழலளவு நறுஞ்சாந்து
கண்பெற் ருள்போல்
சீதமுமிழ் குங்குமத்தின் ஒளிர்திலகம் நுதற்றிலங்க
செவிக்கூ ணுகும்
நாதமென இனியமொழி பேசுதனி அன்னையினை
நாவாற் பாடி
காதலொடெம் மிறைவிகா மாட்சியினை அடியேங்கள்
காப்பென் போமே. 6

தேனளிக்குஞ் செங்கமலத் திருவளிக்குஞ் செல்வமொடு
செந்நா மாது
தானளிக்குங் கலையறிவும் பிணிஅறியா உடல்நலமும்
தம்மின் மிக்கோர்
ஆனமகப் பேறளிக்கும் ஊனளிக்கும் பிறவியினி
அடையா வாறு
வானளிக்கும் நலனளிக்கும் வல்லவிகா மாட்சிதனை
வணங்கு மன்றே. 7

---

6. கண்பெற்ருள்போல் = நெற்றியில் மூன்ருவது கண்ணென்று பெற்றனள்போல், சீதம் = குளிர்ச்சி, திலகம் = பொட்டு, நுதல் = நெற்றி, காதல் = ஆசை.

கருத்து.

நீண்ட புருவமும், சந்தனக் கீற்றுக்கள் கூடிய நெற்றியில் குங்குமமும் விளங்கப் பெற்று காதுக்கினிய ஓங்கார சப்தத்தை எழுப்புகின்ற ஜெகன் மாதாவை பக்தி யோடு வந்தித்து, "காமாட்சி அம்மை நமது காப்புக் கடவுள்" என்போமாக!

7. திரு = இலக்குமி, செந்நாமாது = கலைவாணி, பிணி அறியா உடல் நலம் = நோயற்ற வாழ்வு, மகப்பேறு = பிள்ளைகள், ஊன் அளிக்கும் பிறவி = ஊனுல் உண்டாகும் பிறவி என்றும், ஊனைத் தருகின்ற பிறவி என்றும் கொள்க, வான் அளிக்கும் நலம் = சுவர்க்க போகம்.

கருத்து.

காமாட்சி அம்மையை வணங்கும் அத்தினமே, அஷ்ட ஐஸ்வரியங்களையும், கலைச் செல்வத்தையும், நோயற்ற வாழ்வையும், நல்ல மக்கட் பேற்றையும், இனி பிறவா நலத்தையும், சுவர்க்க போகங்களையும் தந்தருளும் என்பதாம்.

தொண்டைமண் டலமுகந்த கிருட்டினனூர் வேங்கடனாய்த்
தொழுவார்க் கெல்லாம்
கண்டுகொளத் தெய்வமெனக் காட்சிதர அவன்றங்கை
குடிக்கா டென்னும்
மண்டுபுகழ்க் காஞ்சிகுடி காமாட்சி யெனும்பெயரால்
வந்தாள் தன்னை
தொண்டைமண் டலத்தவர்தம் குலதெய்வ மென்றவட்குத்
தொண்டு செய்வாம் 8

ஒருநான்கு முகத்தவனுங் கருதரிய எழிலணங்கே
உமையுன் கோயிற்
கிருநான்கு பாலகரும் அரணளிக்க அடியவர்தம்
இடர்க ணீக்கு
மொருநான்கு கரமோங்க உயர்தனங்க ளருள்சுரக்கு
முளத்தோ யென்ன
இருநான்கு நாடுதொழ எழுந்தருள்கா மாட்சியுனை
ஏத்து வோமே. 9

---

8. தொண்டை மண்டல முகந்த = உள்வாயில், தொண்டையில் மண் தலம் ஆகிய உலகத்தை உண்டு உகந்த, மண்டு = மிகுந்த, தொண்டு = அடிமை.

கருத்து.

துவாபரயுகத்தில் கிருட்டின அவதாரத்தில் பூலோகத்தைத் தன் வாயிற் காட்டி பின் யுகத்தில் திருவேங்கடன் என்று கண் கண்ட தெய்வ மாக நிற்க, அவன் தங்கை குடிக்காடு போந்து ஆங்கு எழுந்தருளி தொண்டைமண்டலத்தவரின் குல தெய்வம் என்று விளங்கும் அம்மைக்கு அடிமை பூண்டு ஒழுகுவோமாக!

9. இருநான்கு பாலகர் = அட்டதிக்குப் பாலகர், அரண் அளிக்க = காவல் புரிய, இடர்கள் = இடுக்கண், இருநான்கு = எட்டு, ஏத்துவோம் = துதிப்போம்.

கருத்து.

அழகை எல்லாம் படைக்கும் பிரமனாலும் எண்ணுதற்கரிய அழகு உடையவளே! உன் திருக் கோயிலுக்கு அட்டதிக்குப் பாலகரும் காவலர் ஆக, அன்பர்களின் இன்னல்களை நீக்கும் நான்கு கரங்களுடனும், தனங் கள் அருட்பாலமுதஞ் சுரக்கும் உள்ளமும் உடையவளே! என்பதாக எட்டு நாட்டவரும் நின்னைத் தொழும்படி எழுந்தருளி யுள்ள காமாட்சி யாகிய உன்னைத் தோத்தரிப்போமாக!

வேழமுக னொருபாங்கர் விளங்குசிவக் கொழுந்தொருபால்
விடையோன் மின்னு
மாழிவல முடையோனு மாங்குபணி செயுங்குறிப்போ
டருகே நின்று
வாழியுன்றன் பெருங்கருணை வாழியவுன் நாமமென
வணக்கங் கூறி
தாழுமவர்க் கன்புசெயுங் காமாட்சி யெனுமிறைவி
சரணம் போற்றி. 10

---

10. வேழ முகன்=யானை முகத்தவன், சிவக்கொழுந்து=முருகன், விடையோன்=இருடபவாகனன் ஆகிய சிவபிரான், மின்னும் ஆழிவல முடையோன்=பிரகாசிக்கின்ற சக்கரத்தை வலத்தில் ஏந்திய விஷ்ணு, பணி செயுங் குறிப்போடு=அம்மையின் உத்தரவு யாதென உணரும் நோக்கத்துடன், தாழு மவர்க்கு=வணங்கு மவர்க்கு, அன்பு செயும்=தயை புரியும், போற்றி=துதிப்போமாக!

கருத்து.

விக்கினேஸ்வரன் ஒரு பக்கமும், முருகர் ஒரு புரமும், சிவன், விஷ்ணுவும், நின் குறிப்பினை எதிர்ப்பார்த்த வண்ணம் நின்று வாழ்த்து கூற, நின்னை வணங்கு மவர்க்குத் தயை செய்யும் காமாட்சியாகிய நின் பாத அடைக்கலத்தைத் துதிப்போ மாக!

தோத்திரப் பதிகம் முற்றுப் பெற்றது.

உ

காமாட்சி அம்மை துணை.

காஞ்சி குடிக்காடு காமாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்

சிறப்புரை.

பாட்டுடைக் கடவுளைக் குழந்தையாகப் பாவனை செய்து அத் தெய்வக் குழந்தை வயது ஏற ஏற நம்முடன் பழகி அருள் விளையாட்டு புரிவதாகப் புகழ்ந்து பாடும் பிரபந்தத்துக்குப் "பிள்ளைத் தமிழ்" என்பர்.

நாம் பெற்ற குழந்தையை "என்னைப் பெற்றவளே" என்று அன்பின் மிகுதியால் உறவை மாற்றி அழைத்துக் கொஞ்சுதல் உலகியலன்றோ! அது போன்று நம்மைப் படைத்த கடவுளை நம் குழந்தையாகப் பாவிப்பது அக்கடவுளின்பால் நமக்குள்ள பக்தி மேலீட்டால் மாறிய ஓர் உறவு முறையாகும்.

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடிய இடத்தில்" என்ற பழமொழியின் விசேட உட்கருத்தை ஆழ்ந்து நோக்குவதும் இங்கு எடுத்துக்கொண்டுள்ள பொருளை மேலும் மேலும் விளக்குவ தாகும். தெய்வத்தைக் குழந்தையாகக் கொண்டாடுவதில் அத் தெய்வத்திடம் பக்தி அதிகரிப்பது அனுபவ உண்மை. அத் தெய்வக் குழந்தை நம் மனக் கண் முன் இருந்து நம்முடன் கொஞ்சிக் குலாவி அருள் திருவிளையாடல் செய்வது போன்றே தோன்றும். நம்மிடையே தெய்வ பக்தியை வளர்க்கும் இக்காரணத்தால் பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தம் சிறந்ததும் ஒப்பற்றதுமான காவிய வகையாகும்.

பிள்ளைத் தமிழை பிள்ளைப் பாட்டு, பிள்ளைக் கவி என்ற பெயர்களாலும் பெரும்பான்மை வழங்குவர்.

வேலூர் முருகன் போன்ற ஆண் தெய்வக் குழந்தையைப் பற்றிப் பாடப் பெறும் பிரபந்தத்துக்கு "ஆண்பால் பிள்ளைத் தமிழ்" என்றும், மதுரை மீனாட்சி போன்ற பெண் தெய்வக் குழந்தையைப் பற்றிப் பாடப் பெறும் பிரபந்தத்துக்கு "பெண்பால் பிள்ளைத் தமிழ்" என்றும் பகுத்துள்ளனர்.

தெய்வக் குழந்தை தன் பல பருவங்களில் வயதுக்கு ஏற்ப செய்யும் அருள் விளையாட்டைப் "பருவங்க"ளாக அமைப்பது பிள்ளைத் தமிழின் இலக்கணம். இதில் சிறப்பாக பெண்பால் பிள்ளைத் தமிழ் 1. காப்புப் பருவம், 2. செங்கீரைப் பருவம், 3. தாலப் பருவம், 4. சப்பாணிப் பருவம், 5. முத்தப் பருவம், 6. வருகைப் பருவம், 7. அம்புலிப் பருவம், 8. அம்மானைப் பருவம், 9. நீராடற் பருவம், 10. ஊசற் பருவம் என்பனவாகிய பத்துப் பருவங்கள் உடையது.

இப் பத்துப் பருவங்களுக்கும் பருவம் ஒன்றுக்குப் பத்துப் பாக்கள் எழுதுவது மரபு. எனினும், பருவத்துக்கு ஒரு செய்யுள் எழுதுவதும் இக்காலத்தில் வழக்காக இருப்பதை ஒட்டி ஈண்டு பருவத்துக்கு ஒரு செய்யுளே அமைந்திருப்பது காமாட்சி அம்மையின் அருட் செயலெனத் தேர்ந்து குழந்தை காமாட்சியின் அன்புக்குப் பாத்திரமாவோமாக!

சிறப்புரை முற்றுப் பெற்றது.

காஞ்சி குடிக்காடு

காமாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்.

விநாயகக் கடவுள்.

வையகத் திதுபொழு தினிதுள உயிர்பல
வருமொரு காலத்தவர்
மண்ணவர் முனமுயர் விண்ணிடங் கொண்டவர்
வானுல கத்தமரர்கள்

ஐயநின் னடிமலர் நெஞ்சகத் துய்த்தவ
ரெண்ணுமக் கருமமெவையு
மடைவரென் றிருநிலத் தருமறை முறையிட
லடியனேன் கற்று மறியேன்

செய்யபொற் பாதனே வேழமா முகவனைச்
சிவையிவள் பெறுவளுணர்தி
சித்தம்வைத் திறைவிநங் குழவிகா மாட்சிமேல்
தீந்தமிழ்ப் பிள்ளைக்கவி

நொய்யனே னுக்குதற் குன்றுணை வேண்டிலேன்
நுதற்றிரு நீறணிபவ
நுண்பொரு ளிறைவநின் றிருவருட் செயலென
நூலிதை யாக்கி யருளே.

அரும்பத உரை.

காமாட்சி அம்மையைச் சிறு குழந்தையாகப் பாவிப்பதால் வயது வந்த பின் வேழமுகனைப் பெறுவாள் என்ற கருத்துப்பட "பெறுவளுணர்தி" என்று அமைக்கப்பட்டது. துணை மாத்திரம் இருந்தால் அமையாது ஆதலால் வேழமுகனே தன் திருவருட் செயலால் இப்பிள்ளைத் தமிழை ஆக்குதல் வேண்டும் என்று வேண்டப் படுகிறது. நொய்யனேன் = சிறியேன், நுதல் = நெற்றி, நுண்பொருள் = பிரவணம்.

கருத்து.

ஓ, விநாயகக் கடவுளே! உன்னை நெஞ்சத்து வைத்து எண்ணுங் கருமங்கள் வையகத்து முக்காலத்தவரும் மற்றைய உலகத்தவரும் அவரவர்கள் எண்ணிய எண்ணியாங்கு அடைவார்கள் என்று வேதம் சொல்லிய போதிலும், அடியேன் அதை உணர்ந்திலேன். வருங் காலத்தில் உன்னைப் பெற இருக்கும் இக் குழந்தை யாகிய காமாட்சியின்மேல் பிள்ளைத் தமிழ் புனைய உன்றுணை அடியேற்குப் போதாது ஆகையால் நீயே இந் நூலை ஆக்கியருள வேண்டும்.

முதலாவது.

காப்புப் பருவம்.

பெற்றவ ருண்டுகொ லறிகிலம் பூமிசை
பெய்வளை யாளிவள் வந்தமை கண்டிலம்
பிள்ளைக ளெத்தனை யீனுமோ ரன்னையோ
பின்னையுண் பாலமு தூட்டுமிம் முலையினள்

உற்றவ ருண்டுகொல் உணர்கில முண்பதற்
கொருபொரு ளிலதிவள் யாதுணும் பெரியளோ
ஊனெடு முலகினில் வந்தவ ளிறைவியோ
ஒளியவிவ் வுருவினள் யாரென உணர்கிலம்

நற்றவம் புரியினு மறையவன் செயவிது
நனியரி தெனுமெழி லுடையளிக் காட்டினில்
நண்ணிவந் தெய்திய தெந்தவப் பயனிதோ
நாமறி கிலமிவட் காரளித் திடுவது

கொற்றவ னெனவுயிர் காக்குமோர் முகில்வணன்
குழவிதன் றங்கையென் றினிதருட் செயவலான்
கூதல்தண் ணார்குடிக் காடுகா மாட்சியை
கூனல்சங் கேந்துமந் நெடியமால் காக்கவே.

அரும்பத உரை.

பெய்வளை = நிறைவளைகள், ஈனும் = பெறும், கூதல்தண் = குளிர்ந்த சோலையும், ஓதம் நிலவிய தரையும், ஆர் = பொருந்திய, கூனல் = வளைந்த, நெடியமால் = மகாவிஷ்ணு.

கருத்து.

இத் தெய்வக் குழந்தையைப் பெற்றவர்கள் யார் என்றோ, குழந்தை ஈண்டு வந்தது எப்படி என்றோ, இவள் குழந்தைகள் எத்தனை பெற்றுப் பாலமுது ஊட்டுபவள் என்றோ, இவளுக்கு உற்றவர் உண்டில்லை என்றோ, யாது உண்டு வளர்பவள் என்றோ, குழந்தையாக வந்தவள் இறைவிதானோ என்றோ, யார் என்றோ உணர முடியவில்லை. இவ் வெழி லுடைய குழந்தை இக் காஞ்சி குடிக்காடு வந்தது எங்கள் தவப்பயனே! இக்குழந்தையை யார் காப்பாற்ற முடியும்! எல்லா உயிர்களையும் காப் பாற்றக் கூடிய விஷ்ணுவே இக்குழந்தையை தன் தங்கை என்று காப்பாற்ற வேண்டும்!

இரண்டாவது.

செங்கீரைப் பருவம்.

சுத்தவெண் பொடிகமழ் நெற்றியிற் றிலகமுஞ்
சூதவ முண்போதின்
றூளிதஞ் செறிகருங் கூந்தலி னொளிமிகுஞ்
சூரிய னிந்தோடு

நித்திலஞ் சுடர்விடுஞ் சுட்டியு மிருகுழை
நீள்செவி யோடாட
நீண்டகொப் பொடுமிடற் றிலகுநற் பவழமும்
நீக்கமி லாரந்தாழ்

முத்தமுங் கனகமென் பட்டுடை யிடையினள்
முக்கணர் காமாட்சி
மும்மலந் தணலெழ விட்டநெட் டிலையுயர்
முத்தலைச் சூலத்தோய்

அத்தமித் தலமுயர் வுக்கென அபயமீந்
தாடுக செங்கீரை
ஆடுகிண் கிணியொடு தண்டையுங் கலினென
ஆடுக செங்கீரை.

அரும்பத உரை.

சுத்த வெண் பொடி=திருநீறு, சூதவம்=வண்டு, போதின் தூளிதம்=மகரந்தப் பொடி, இந்து=சந்திரன், நித்திலம்=முத்து, மிடற்றிலகு=கழுத்தில் பிரகாசிக்கின்ற, கனகமென் பட்டுடை=பீதாம் பரம், முக்கணர் காமாட்சி=பரமேஸ்வரரின் இடப்பாகமாக அமையத் தோன்றிய காமாட்சி, மும்மலம்=ஆணவம் காமியம், மாயை என்பன, அத்தம்=கை.

கருத்து.

நெற்றியில் திருநீறும் பொட்டும், பூ சூடிய கூந்தல், அதில் முன் பக்கம் சூரிய சந்திர பிறை, இதனிடையில் சுட்டி, நீண்ட காதில் குழை, கொப்பு, கழுத்தில் பவழமும், முத்து மாலையும், இடையில் பீதாம்பரம், இந்தத் திருக் கோலத்தோடு கூடியவள் சிவபிரான் இடப்பாகத்துக்கே உரிய காமாட்சி எனும் பெயருடையாள்; ஆணவம், காமியம், மாயை என்பனவாகிய மும்மலங்களும் அழியும்படி ஏவப்படும் திரிசூலத்தைக் கையில் ஏந்தியவள் ஆகிய நீ, இக் குடிக்காட்டுத் தலத்தினர் வாழ அபயந் தந்து செங்கீரை ஆடுக!

மூன்றாவது.

தாலப் பருவம்.

உயரு மிமயந் தருமிளங் குழவியிவ்
ஊராங் காடெய்தி
உறையுஞ் சிறுமி எனவரு மிறைவியை
ஓம்பிச் சீராட்டித்

துயரொன் றறியா உவகையி னுலகவர்
சூழப் பாராட்டித்
தொண்டைக் கணியர் மழலைபைங் கிளியொடு
சொல்லா னன்பாகி

உயதே சிகனர் மகவினை யுடலுற
உய்த்தே தாலாட்ட
உரைநா மகளின் னிசையொடு பகர்தரு
மோவா கீதத்தான்

தயையென் றிருகண் பொழிகட லுடையுமை
தாலே தாலேலோ
தலமாங் குடிக்கா டுடையவள் துயிலுற
தாலே தாலேலோ.

அரும்பத உரை.

இமயந்தரும் இளங்குழவி = பர்வத ராஜன் மகள், ஓம்பி = காப்பாற்றி, தொண்டைக் கணியர் = தொண்டை நாட்டை அழகு செய்பவர், மழலை பைங்கிளி யொடு = மழலைச் சொல் பயில்கின்றவளும் கிளிபோல் பசுநிற முடையவளுமாகிய குழந்தை காமாட்சியுடன், உய = உய்யும் பொருட்டு, உரை நாமகள் = சாத்திரங்களை உரைக்கும் நாவுடைய சரஸ்வதி, ஓவா = நீங்காத.

கருத்து.

இமயத்திற் பிறந்த குழந்தையாகிய நீ, குடிக்காட்டிற்கு வந்ததும், ஊரில் உள்ளோர் நின்னைச் சீராட்டி, உலகினர் பாராட்டி, தொண்டை மண்டலத்தவர் உன்னுடன் கொஞ்ச, தேசிக பரம்பரையினர் உன்னை மார்போடு அணைத்துத் தாலாட்ட, சரஸ்வதி கானம் பாட, இரு கண்களி லிருந்து அருள் வெள்ளத்தைப் பொழிகின்ற உமையவளே! உனக்குத் தாலாட்டுகிறோம்.

நான்காவது
சப்பாணிப் பருவம்.

பனிதந் திழிகுலை கதலிமு னிழலிய
பரவுநெ டும் பந்தர்
பலதெங் கொடுபனை கனிகுலை கமுகினுற்
பழந்தந் ததுபோலும்.

குனியுங் கனைகட லுதவுநித் திலவடம்
குலவும் படிதூக்கிக்
குணநன் மணமிகு கலவையின் மெழுகிய
குலமா புவிமீது.

நனிநன் நவமணி யவைகொடு அலகுகள்
நவமாய்ப் பலதூவ
நளினத் தமர்திரு வொடுகவி பயில்பவள்
நகைசிந் திடுநோக்கார்.

குனியும் புருவநின் றெழுமயில் விழியுமை
கொட்டுக சப்பாணி
குடிக்கா டிடமென அமருமெ முமையவள்
கொட்டுக சப்பாணி.

அரும்பத உரை.

பனிதந்திழிகுலை கதலிமுனிழலிய = குளிர்ச்சியைக் கொடுத்து குலையினை ஈனுகின்ற வாழை வாயில் முகப்பில் நிழல்தர, பந்தர் பழந்தந் தது போலும் = பந்தல் பழந்தரும் சோலை போன்றது, குனியும் கனைகடல் = வளைந்து சப்திக்கும் அலைகளையுடைய கடல், நித்தில வடம் = முத்துத் தோரணங்கள், குலவும்படி = பிரகாசிக்கும்படி, கலவையின் = சந்தனக் குழம்பால், அலகு = கோலம், நளினம் = தாமரை.

கருத்து.

குலைவாழை, தென்னங்குலை, பனங்குலை, பாக்குக் குலை இவைகள் கட்டப்பட்டதால் பழந்தரும் சோலை போல் தோன்றும் பந்தலில் முத்து மாலைகளைத் தோரணமாகக் கட்டி அலங்கரித்து, தரையில் சந்தனக் குழம்பால் மெழுகி நவமணிப் பொடியால் கோலமிட்டு, இலக்குமியும், சரஸ்வதியும், ஆனந்த பரவசமாக பக்த கோடிகளை நோக்கும் அருள் விழியாய்! நீ இப்பந்தலில் அமர்ந்து சப்தம் உண்டாகும்படி கையோடு கை கொட்டுக.

ஐந்தாவது

முத்தப் பருவம்.

ஒலிகொள் செவியி னுணர்வினொடு
மூறும் நாவின் உருசியினளே!
ஒளிகாண் நயன திருட்டியொடு
முடல் முழுதுந் தருமுணர்வே!

மலிநன் மணமுங் கொளுமுணர்வாய்
வயங்கும் பொருளே! கனியதரம்
வடிக்குந் தமிழும் மூலையமுதாய்
வழங்கு மினிய பாற்கடலும்

பொலிநின் னுருவந் தருமொளியும்
புகழ்பூ தங்க ளென உடற்குப்
புலனு வனவாம் பொருளுமணி
புதுமென் மலர்வா சப்பொடியும்

வலிதா மெவையு மமை கின்ற
வடிவே! முத்தம் தருகவே
வளர்கா மாட்சி யெனும் பெயரால்
வருவோய்! முத்தம் தருகவே.

அரும்பத உரை.

1. ஒலிகொள் செவியின் உணர்வு=சப்தத்தைக் கிரகிக்கும் செவியின் புலனுணர்ச்சி, 2. ஊறும் நாவின் உருசி=சுவைக்கேற்ப நீர் சுரக்கும் நாக்கின் புலனுணர்ச்சி, 3. ஒளிகாண் நயன திருட்டி=வெளிச்சத்தைக் காணும் கண்களின் புலனுணர்ச்சி, 4. உடல முழுதுந் தருமுணர்வு=மெய் பூராவும் நிறைந்துள்ள பரிச உணர்ச்சி, 5. மலிநன் மணமுங் கொளுமுணர்வு=நிறைந்துள்ள நாற்றத்தை உணரும் நாசியின் புலனுணர்ச்சி.

1. கனியதரம் வடிக்கும் தமிழ்=செவிப்பொறிக்குப் புலனாகியும், நின் உதடுகளின் வழியாக வந்ததுமாகிய தமிழ், 2. மூலையமுதாய் வழங்கும் இனிய பாற்கடல்=பொறியாகிய நாக்குக்குப் புலனாகும் மூலைப்பாலமுதம், 3. பொலிநின் உருவந் தருமொளி=கட்புலனுணரும் நின் திருமேனி ஒளி, 4. புகழ் பூதங்களென உடற்குப்புலனு வனவாம் பொருள்=பரிச உணர்ச்சிக்கு ஏதுவாக உள்ள பஞ்ச பூதங்களால் ஆய பொருள், 5. அணிபுது மென்மலர் வாசப் பொடி=அன்று பூத்துச் சூடப்பெற்ற மலரின் மகரந்தப் பொடி, வலிதா மெவையும்=புலனுணர்ச்சிக்கு ஏதுவானப் பொருள்களைத் தன்னிடத்தே இருத்தக் கூடிய வன்மை யுடையன யாவும்.

கருத்து.

ஊறு, ஓசை, சுவை, ஒளி, நாற்றம் ஆய ஐம்புல னுகர்ச்சிகளாயும் புலன்கள் உணரக்கூடிய பொருள்களாயும், அமைந்துள்ள இறைவியே முத்தம் தருக!

ஆருவது
வருகைப் பருவம்.

காதணி யசைந்திட தாழ்வட மலைந்தாட
கருங்குழற் கொண்டை சரிய
காடுகொட் புட்பமீ துண்ணுவண் டாடிட
கதிரொளி ரிருவ ரசைய

சீதவெண் டரளபொற் சுட்டிப்பெ யர்ந்தாட
திகழுமுத் தரியம் நெகிழ
தீந்திதந் தோமென காளியர் கூளியர்
திசை தொறும் நிருத்த மிடவும்

நாதகின் கிணியொடு தண்டையு மணிபதம்
நடமிட சிலம்பு வனவாய்
நந்திகே சன்திமி திந்திமி என்றுதன்
நவில்முழ வதிர வருள்வன்

பாதநன் னடைபயில் பச்சிளஞ் சேயடவி
குடியமர் மகள் வருகவே
பையநின் னடிபெயர்ந் தெங்களை யாட்கொள
படிமிசை உமை வருகவே.

அரும்பத உரை.

காடு=கூந்தற்காடு, கதிர் ஒளிர் இருவர் அசைய=தலையில் அணிகின்ற சூரியனும்சந்திரனும் அசைய, சீதவெண்டரள பொற் சுட்டிப் பெயர்ந்தாட=குளிர்ச்சியும், வெண்மை யானதுமான முத்துக்கள் கட்டிய பொன்சுட்டி பொருந்திய இடத்திலிருந்து பெயர்ந்து ஆட, உத்தரியம்= மேலாடை, நெகிழ=விலக, சிலம்புவன=சப்திப்பன, நவில்முழவு= புகழ்ந்து பேசப்படும் தோல் கருவி வாச்சியம், அடவிகுடி=குடிக்காடு, படி=பூமி.

கருத்து.

குழைகள் அசைய, தாழ்வடம் அலைய, கொண்டை சரிய, கூந்தவில் சூடிய புட்பங்களில் தேனை உண்ணும் வண்டுகள் எழுந்து ஆடிட, முன்றலையில் சூடிய சூரியன் சந்திர பிறை அசைய, சுட்டிப் பெயர்ந்தாட மேலாடை நெகிழ, குழந்தையின் நடை கண்ட காளியும் கூளியும் குதூகல நடனமிட, அம்மை, நின் காலில் அணிந்த கிண்கிணி, தண்டை சப்திக்க, நந்திகேசன் முழவொலி செய்ய, நடக்கப் பழகும் குழந்தை காமாட்சியே! எங்களை ஆட்கொள வருக!

ஏழாவது
அம்புலிப் பருவம்.

கானுக்கு ளித்திரு வனிதையுட னுடவோ
காண்கில மொரு சிறுமியை
கம்மிடங் கொண்டவன் நீயலால் வேறிலை
ககனம் விட்டிழிதல் நன்று.

வானுக்கு ளூற்றவ னென்றெலாம் வீணுரை
வாயுறப் புகல்வை எனிலோ
மாவுட்க வீருற்றுத் தோல் சுற்று மாடையன்
வார்சடைக் கேற்க இசைவன்.

மானிற்க அன்றரன் ஓரிடந் தந்ததை
மானநின் றனக்கு மீவாள்
வல்லையித் தெய்வக்கு ழந்தையோ டாடுதல்
மாதவஞ் செய்வ தொக்கும்.

ஏனுக்கு பாம்பினுக் கிரையாவ தம்மையோ
டம்புலீ ஆடவாவே
இறைவியென் ஸ்ரீய்குடிக் காடுகா மாட்சியோ
டம்புலீ ஆட வாவே.

அரும்பத உரை.

கான் = காடு, கம் = ஆகாயம், ககனம் = ஆகாயம், வீண் உரை = வீண் வார்த்தை, மாவுட்க வீருற்று = யானை மடிந்து போக வீரச் செயல் புரிந்து, வார்சடைக்கு ஏற்க = முழுச் சந்திரனை பிறையாக்கிச் சடையில் அணிய, நின்றனக்கும் ஈவாள் = உனக்கும் மான் ஒன்றைக் கொடுப்பாள், ஏன் பாம்பினுக்கு இரை ஆவது = ஏன் கிரகணத்தில் பிடிபடுவது.

கருத்து.

இக்குழந்தையுடன் ஆட இக்குடிக்காட்டில் யாரும் இலர். அம்புலியே! நீ இதையுணர்ந்து வானினின்று இழிந்துவர வேண்டும். பூலோகத்துக்கு வருவது உனக்குக் குறைவு என்று நீ நினைத்தால் உன்னைப் பிறையாக்கி சிவன் உன்னை சடையில் அணிவன். இத் தெய்வக் குழந்தையோடு ஆடுவாயானல் சிவனிடம் இருப்பதுபோல் உனக்கும் மான் கிடைக்கும். இதைத்தெளிந்து நடக்காவிட்டால் உன்னைக் கிரகணப் பாம்பு பிடித்து உண்ணும் ஆதலால் காமாட்சி அம்மையுடன் ஆட வருவாயாக!

96
6-70

எட்டாவது
அம்மானைப் பருவம்.

மண்டல மதிர்ந்திட விண்டிசை குலுங்கிட
வையகந் தாங்கு மரவம்
வாலொளி மணியவை ஆயிர முமிழுமொர்
வண்ணமுட் சோர்வு பெறவும்

எண்டிசை கயங்களும் நிலைகுலை வெய்தவும்
ஏழுல கங்க ளதிர
இந்திரன் விதிர்த்தெழ அந்தக னுடல்வியர்த்
திந்துவும் பானு முருள

மண்டுமின் மினியென ஒளிர்தரு முடுவெலாம்
வானினின் றேதங் கொள
வானுறை இமையவர் மலர்மழை யதுபெய
வண்டிசை நாத முடனே

அண்டருக் கருளமு தந்தர வந்தவள்
அம்மானை ஆடி யருளே
அம்மைகா மாட்சியென் றமர்குடிக் காட்டினுய்
அம்மானை ஆடி யருளே.

அரும்பத உரை.

விதிர்த்து = அஞ்சி, அந்தகன் = இயமன், மண்டும் = எண்ணிக்கை அதிகமாகியுள்ள, உடுவெலாம் = தாரை எல்லாம், ஏதம் = துன்பம், மலர்மழை + வண்டிசை நாதம் = மலர் மழையின் ஓசையும், அம்மலரின் மொய்க்கும் வண்டின் ஓசையும் ஆகிய இனிய கானம்.

கருத்து.

பூமி அதிர, வானம் குலுங்க, பூமியைத் தாங்கும் அரவம் தன் ஆயிர மணிகளையும் சிந்தும்படி சோர்வுறவும், அட்டதிக்குக் கஜங்களும் நிலை தடுமாறவும், ஏழு உலகங்கள் அதிரவும், இந்திரன் பயந்து தன் ஆசனத்தி லிருந்து எழவும், இயமன் உடல் வியர்க்கவும், சூரியர் சந்திரர் உருளவும், நட்சத்திரங்கள் தம் தம் இடங்களில் இருக்க முடியாமல் வருந்தவும், வானோர் மலர்மழை பொழிய அதில் வண்டிசை செய்ய, இவ்வினிய கானத்திடையே அம்மானைக்காய் ஆடுக!

ஒன்பதாவது

நீராடற் பருவம்.

கஞ்சமென் முகமுந்த கருங்குறு வேரென
கமழ்குழ லலைந்து துவள
களையுபுட் பக்குவை கலமென மிதப்பமொய்
கருவண்டி வர்ந்து செல்லும்

மிஞ்சுகந் தப்பொடி விரைந்துநன் னீரொடு
விரிந்துதன் வாசமுலவ
வீங்குகொங் கைக்கணி சந்தமுந் தாணையும்
வெள்ளநீ ரோடுவிரவ

பஞ்சுக்கும் நன்வதன கஞ்சத்து மணிகின்ற
பண்டங்கள் வாங்கு மகளிர்
பத்தினி யார்களாஞ் சத்தகன் னியர்களும்
பட்டொடு பணியு மேந்த

பிஞ்செற்கு மிகுபகை அஞ்சிற்கு ளமர்பவள்
பெருகுநீ ராடியருளே
பெண்ணெனுங் காவிரிக் கரைகுடிக் காட்டினுய்
பெருகுநீ ராடியருளே.

அரும்பத உரை.

கஞ்சம் = தாமரை, களையுபுட்பக்குவை = சூடிக்களைந்த புட்பமுட்டுகள், கலம் என = மரக்கலங்கள் போல மிதந்து செல்ல, பஞ்சு = பஞ்சு போன்ற பாதம், பிஞ்சு = இளையவள், அஞ்சு = பஞ்சேந்திரியம், பெருகு நீர் = ஆடிப் பெருக்குநீர்.

கருத்து.

தாமரை மலர், நீர்மட்டத்தில் தணிந்தும் உயர்ந்தும் மிதந்து அசைதல் போல் தோன்றும் முகம் வெள்ள நீரில் அமிழ்ந்தும் உயர்ந்தும், குறுவேர் போல், கறுத்தும், வாசம் பொருந்தியதுமான கூந்தல் நீரில் அலைபவும், களைந்து எறியப்பட்ட புட்பமுட்டுகளில் வண்டுகள் மொய்த்து தோணியில் அமர்ந்தது போல் செல்லவும், வாசனைப் பொடி சிந்தி நீரோடு கலந்து மணம் வீசவும், மார்பினில் பூசிய சந்தனமும், அணிந்த தானையும் நீரோடு கலக்கவும், பஞ்சுபோன்ற பாதத்துக்கும், தாமரை போன்ற முகத்துக்கும் உபயோகப்படுத்தக் கூடிய பொருள்களைத் தாங்கி நிற்கும் பெண்கள் ஒருபுரம் நிற்கவும், பொன்னுடைகளையும், அணிகளையும், சத்த கன்னியர்கள் ஒருபுரம் ஏந்தி நிற்கவும் எமது பகைவர்களாகிய பஞ்சேந்திரியங்களில் கரந்துறையும் குழந்தாய்! நீ ஆடிப் பெருக்குநீரில் ஆடுக!

93
6-70

2ரம:38, 2ர1193
ரசு8

பத்தாவது

ஊசற் பருவம்.

வானத்து ளிப்புவ னப்படியை யீர்க்குமவ்
வடங்களி னுற் பிணைத்து
வண்ணபொற் பலகையின் வெண்பொடி அணியுமெம்
மரகத வல்லியமர

ஞானத்தொ டரிதுயிர்க் கமைகின்ற அரவணை
நாவிரண் டோடசைதர
ஞாலத்து ளோருரு மாறிப்பி றப்பர்போல்
நண்ணித்தி ரும்புவண்ணம்

பானுக்க மர்ந்துசுழல் இரதந்த னைக்கடவும்
பன்னிற ப்புரவி வெட்க
பச்சிளஞ் சேயுளம் நச்சும்ப டிக்கசைய
பலகைநன் காடவிட்டு.

பூநக்கி காவிரி மன்னுகா மாட்சிசெம்
பொன்னூச லாடியருளே
பொங்குநற் குடியெனுங் காடுடை இறைவியே
பொன்னூச லாடியருளே.

அரும்பத உரை.

புவனப்படி = பூமி, ஈர்க்கும் = இழுக்கும், பிணைத்து = கட்டித் தொங்க விட்டு, வண்ண பொற் பலகை = பல நிறங்களை பிரதிபலிக்கும் ஒளியோடு கூடிய பொன் பலகை, வெண்பொடி = வெண்ணீறு, மரகதவல்லி = பச்சைநிற காமாட்சி, பானு = சூரியன், பன்னிறப் புரவி = ஏழுநிறக் குதிரைகள், நச்சும் = விரும்பும், பூநக்கி காவிரி = தேன் வண்டுகள் நிறம்பிய சோலையிடையே நெளிந்து செல்லும் ஆறு.

கருத்து.

வானத்தோடு பூமியை இழுத்து நிலைபெறச் செய்துள்ள சக்தியால் தொங்க விடப்பட்ட பூமியாகிய அழகிய பலகையில் காமாட்சி அமர்ந்து, ஊசல் அசைய, அரியின் பாயலாகிய அரவு எழுந்து அசைய, உயிர் சென்று திரும்புவதுபோல ஊசற் பலகை சென்று திரும்பி வரும்படி, சூரியனுடைய இரதத்தை இழுக்கும் ஏழு குதிரைகளும் தம் வேகம் குறைவென வெட்க, (உமையவள்) தன் கால்களால் பலகையை வேகமாக ஆடவிட்டு குடிக்காடு அமரும் அம்மையே நீ ஊசல் ஆடுக.

112792

காமாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் முற்றுப் பெற்றது.

৭B
৮.৭০